1979 நவம்பர் 3]

மதுரை அண்ணா நகர் பகுதியில் கழிவுநீர் அகற்று வசதிகள்.

*வினா எண். 93—திரு. சீ. செல்வராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுரை அண்ணா நகர் பகுதியில் குடிசை மாற்று வாரியத்தில் கட்டப்பட்டுள்ள பகுதிகளில் கழிவுநீர் சாக்கடை அமைக்கப்படாததால் கழிவுநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) : மதுரை அண்ணா நகர் பகுதியில் குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள பகுதிகளில் கழிவுநீர் சாக்கடை அமைக்கப்பட்டுள்ளது. எனவே கழிவு நீர் தேங்குவதற்கு இடமில்லை.

திரு. சீ. செல்வராஜ் : தலைவரவர்களே, மதுரை அண்ணா நகர் பகுதி மதுரையில் முக்கியமான ஒரு பகுதியாகும். அந்தப் பகுதி வைகை ஆற்றங்கரையில் குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்பட்டது. அங்கே அடிக்கடி இந்தக் குறை ஏற்படுகிறது. பொதுமக்களிடமிருந்து புகார் வந்துகொண்டிருக்கிறது. அமைச்சரவர்கள் மேலும் அதை சீர்படுத்தி, அந்தப் பகுதி குறையை தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன.

(பதில் இல்லை)

செட்டிக்குளம்—லெவிஞ்சிபுரம் குடிநீர்வழங்கு திட்டம்.

*வினா எண். 94—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் இராதாபுரம் தொகுதியில் செட்டிகுளம் லெவிஞ்சிபுரம் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ள கிராமங்கள் யாவை?

(ஆ) செட்டிக்குளத்தில் திட்ட ஆய்வு மேற்கொண்டு லெவிஞ்சிபுரத்தில் திட்ட ஆய்வு மேற்கொள்ளாதது அரசுக்குத் தெரியுமா?